# வரலாறு

## தரம் 7 அலகு 2 எமது கீர்த்தி மிக்க அரசர்கள்

### மானவர்ம மன்னன் ஆட்சிக்கு வருமுன் அரசியல் நிலை :

- வசபன் - இலம்பகர்ண வம்சம்
- தாதுசேனன் - மோரிய வம்சம்
    - இலம்பகர்ண வம்சம்
    - மோரிய வம்சம் - அநுராதபுரத்தை நீண்டகாலம் ஆட்சி செய்த வம்சம்.
- ஆட்சி உரிமைக்காக இவ்வம்சங்களிடையே மோதல்கள் ஏற்பட்டன.
  மோதலின் விளைவுகள்.
    - நிலையான ஆட்சி இன்மை
    - நாட்டின் செல்வம் அழிவடைந்தமை
    - இரு அரச வம்சந்தவர்களும் காலத்திற்குக் காலம் தென்னிந்தியப் படைகளை வரவழைத்தமை.
    - நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றமை.

**மானவர்ம மன்னன் ( கி.பி. 684 – 78)**

- தந்தை – 2 ஆம் காசியப்பன்
- 2 ஆம் காசியப்பன் கி.பி 650 இல் ஆட்சிக்கு வந்தான்.
- 9 ஆண்டுகள் ஆட்சி செய்தான்.
- நோயின் காரணமாக இறந்தான்.
- மானவரமன் சிறுவன்
- ஆட்சிக்காக மோதல்கள் ஏற்பட்டன.
- மானவர்மன் பாதுகாப்பிற்காக ஒழிந்து வாழ்ந்தான்
- ஆட்சியாளன் 2 ஆம் தடோபதீசன் மானவர்மனைத் தேடியபடியால் அவன் இந்தியாவிற்குத் தப்பி ஓடினான்.
- இந்தியாவில் பல்லவ அரசிற்குத் தப்பிச் சென்ற மானவர்மன் 1 ஆம் நரசிங்கவர்ம பல்லவனுக்கு விசுவாசமாகச் சேவை புரிந்தான்.
- பல்லவ அரசனின் போர்களில் மானவர்மன் உதவியால் பல்லவ மன்னன் மானவர்மன் மீது நல் அபிப்பிராயம் கொண்டிருந்தான். இதனால் மானவர்மனுக்கு படை உதவி வழங்கினான்.
- மானவர்மன் இலங்கைக்கு வந்து 2ஆம் தடோபதீசனுக்கு எதிராகப் போரிட்டான்.
- போர் நேரத்தில் இந்தியாவில் பல்லவ மன்னன் நோயுற்றதால் உதவிக்கு வந்த படை திரும்பிச் சென்றது.
- இதனால் மானவர்மனும் போரைக் கைவிட்டு இந்தியா சென்றான்.
- தனது குறிக்கோளை அடைவதற்காக 20 வருடங்கள் பல்லவ மன்னனுக்கு உதவி செய்து வந்தான்.
- பல்லவ மன்னன் 2 ஆம் நரசிங்கவர்மனின் படை உதவியுடன் இலங்கைக்கு வந்து அப்போதைய இலங்கை ஆட்சியாளன் ஹத்தாட மன்னனைத் தோற்கடித்து கிபி 684 ஆம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றினான்.
- மானவர்மன் அரசனாவதற்கு முன் 50 ஆண்டுகள் நாட்டில் உள்நாட்டுப் பூசல்கள் இருந்ததால்
    - அரசியல்
    - பொருளாதாரம் சீர்குலைந்து காணப்பட்டது.
- நடுத்தர வயதிலேயே மானவர்மன் ஆட்சியைப் பெற்றான்.
- 35 ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்தான்.
- நிலையான ஆட்சி தோன்றியது.
- இவனது ஆட்சியின் போது நாட்டில் மரபு ரீதியான நிர்வாக முறை ஏற்பட்டதாக அறியமுடிகின்றது.
- அரசுரிமையில்
    - மரபுரிமை ஆரம்பமானது
    - மானவர்மனுக்குப் பின் அவனது பிள்ளைகள் ஆட்சிக்கு வந்தனர்.
- மானவர்ம வம்சம் அநுராதபுர காலத்தின் இறுதிவரை 300 ஆண்டுகள் வரை ஆட்சிபுரிந்தது.

**முதலாம் சேனன் ( கி.பி 833 – 853)**

- தந்தை - 2 ஆம் தப்புல
- வம்சம் - மானவர்ம வம்சம்
- 2 ஆம் தப்புல 16 ஆண்டுகள் ஆட்சி செய்தான்.
- அதன் பின் அவனது மகனான 4 ஆம் அக்போ ஆட்சி செய்தான்.
- 4 ஆம் அக்போ ஆட்சிக் காலம் - 3 வருடங்கள்
- அதன் பின் அவனது சகோதரன் 1 ஆம் சேனன் கி.பி 833 இல் அரசனானான்.
- 20 வருடங்கள் ஆட்சி செய்தான்.
- முதலாம் சேனனின் ஆட்சியின் ஆரம்பத்தில் இலங்கை பாண்டியரால் ஆக்கிரமிக்கப்பட்டது.
- தென்னிந்தியாவில் பாண்டியராட்சி மேலோங்கி இருந்தது.
- ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லவன் பாண்டிய மன்னன் பெருஞ்சேனையுடன் இலங்கையை ஆக்கிரமித்தது.
- முதலாம் சேனனின் படை தோல்வி
- யுத்தத்தில் முதலாம் சேனனின்
    - சகோதரன் - மகிந்தன்
    - இளவரசன் - காசியப்பன் இறந்தனர்.
- முதலாம் சேனன் பாதுகாப்பிற்காக மலையரட்டைக்குத் தப்பிச் சென்றான்.
- பாண்டியப் படை அநுராதபுர நகரத்தைச் சூறையாடியது.
- முதலாம் சேனனுக்கும் பாண்டிய மன்னனுக்கும் இடையே சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டதன் விளைவாக பாண்டியர்கள் மீண்டும் அரசை முதலாம் சேனனிடம் கையளித்தனர்.
- இந்த ஆக்கிரமிப்பின் நோக்கம் நாட்டைக் கைப்பற்றுவதனை விட பெறுமதியான செல்வத்தினைக் கொள்ளையடிப்பதாகும்.
- முதலாம் சேனன் ஆக்கிரமிப்பாளர்களால் சிதைவுற்ற பிரதேசங்களை மீண்டும் புனரமைத்தான்.
- ரிட்டிகல ஆராமை, ஜேத்தவனராமய, அபயகிரி ஆகிய விகாரைகளுக்கு அருகில் புதிய கட்டடங்களை அமைத்தான்.
- பாண்டிய யுத்தத்தில் முதலாம் சேனனின் சகோதரர்கள் இருவர் இறந்தனர்.
- இதனால் சகோதரரான உதயன் இளவரசனாக நியமிக்கப்பட்டான்.
- இளவரசன் உதயன் நோயினால் இறந்தான்.
- இதனால் போரில் இறந்த காசியப்ப இளவரசனின் மூத்த மகன் சேனன் இளவரசன் யுவராஜாவாக நியமிக்கப்பட்டு உருகுணைப் பிரதேசத்தின் ஆட்சியதிகாரத்தைப் பெறுப்பேற்றான்.

**இரண்டாம் சேனன் ( கி.பி 853 – 887)**

- முதலாம் சேன மன்னனின் சகோதரன் காசியப்ப இளவரசனின் மகன்
- உருகுணை ஆட்சியாளனான 2 ஆம் சேனன் 1 ஆம் சேனன் இறந்த பின் அநுராதபுர மன்னனானான்.
- 2 ஆம் சேனன் 35 வருடங்கள் ஆட்சி செய்தான். அக் காலத்தில்
    - நாட்டில் சமாதானம் நிலவியது.
    - செழிப்பான நிலை மீண்டும் ஏற்படுத்தப்பட்டது.
    - பொருளாதாரம்
    - பௌத்த சாசன வளர்ச்சி என்பன ஏற்பட்டது.
- 1 ஆம் சேனன் காலத்தில் சிதைவடைந்தவற்றைப் புனரமைத்தான்.
- பௌத்த சாசன வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினான்.
- மிகிந்தலையில் வைத்தியசாலை அமைத்தான்
- மகாவலி கங்கையில் அமைக்கப்பட்டிருந்த **மணிமேகலை (மினிப்பே)** அணைக்கட்டினைப் புனரமைத்தான்.
- மின்னேரியாக் குளத்தில் மதகு ஒன்றைக் கட்டினான்.
- 1 ஆம் சேனன் காலத்தில் பாண்டியர்கள் அபகரித்துச் சென்ற பொருட்களை மீட்டான்.

- பாண்டிய இளவரசன் 2 ஆம் வரகுணவர்மன் பாண்டிய சிம்மாசன உரிமைப் போராட்டத்தில் தனக்கு உதவும்படி கேட்டு இலங்கை வந்தமையால் பாண்டிய நாட்டை ஆக்கிரமித்தான்.
- இரண்டாம் சேன மன்னனின் தளபதி **குட்டக.**
- பாண்டிய நாட்டிற்குச் சென்ற படைகளுக்குத் தலைமை தாங்கி பாண்டியப் படைகளைத் தோல்வியடையச் செய்தான்.
- பாண்டியரின் தலைநகர் - மதுரை
- மதுரை சுற்றிவளைக்கப்பட்டதில் ஸ்ரீமாற ஸ்ரீவல்லவன் மரணமடைந்தான்.
- வரகுணவர்மன் பாண்டிய நாட்டு மன்னனாக இலங்கைப் படையினரால் முடிசூட்டப்பட்டான்.
- இரண்டாம் சேன மன்னனின் இவ் வெற்றி கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளது.
- அநுராதபுர **இரிபின்னியாவ கல்வெட்டில் குட்டா செனவிரதாணன்** எனக் குறிப்பிடப்பட்டுள்து.
- இது பாண்டிய ஆக்கிரமிப்பை நடத்திய குட்டக தளபதியை குறிக்கும்.

**ஆட்சி அமைப்பு முறை**

- மன்னன்
- மன்னனுக்கு உதவும் அதிகாரிகள் குழு.
- நாடு முழுவதும் இதன் அதிகாரத்திற்குக் கீழ் கட்டுப்படும் படி உருவாக்கப்பட்டிருக்கும் ஆட்சி முறை – **மத்திய ஆட்சி**
- மத்திய ஆட்சியின் தலைவர் - மன்னன்.
- அரசுரிமை பாரம்பரிய முறையில் வழங்கப்பட்டது.
- அநுராதபுர காலத்தில்
  - தந்தைக்குப் பின் மகன்
    பண்டுகாபயன் - மூத்தசிவன்
  - மூத்த சகோதரன் - இளைய சகோதரன்
    துட்டகைமுனு – சத்தாதிஸ்ஸன்
    என்ற ரீதியில் அரசுரிமை வழங்கப்பட்டது.

**ஆட்சியுரிமையுள்ள இளவரசனுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள்**

- உயர்ந்த கல்வி
- மொழியறிவு
- ஆவணங்கள் குறித்த பாரம்பரியக் கல்வி (பௌத்த பிக்குகளால் வழங்கப்பட்டது)
- வில்வித்தை } நிபுணர்களால் வழங்கப்பட்டது.
- வாள்வித்தை }
- புதிய மன்னர் ஒருவர் அரசுரிமை பெறும் போது பட்டாபிஷேகம் செய்யப்பட்டது.
- பட்டாபிஷேகம் - மன்னன் தனது பொறுப்புக்களை சட்டரீதியாகப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம்

**மன்னனின் கடமைகள்.**

- நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் பேணுவது.
- உள்நாட்டு , வெளிநாட்டு பகைவர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பது.
- மத்திய ஆட்சிக்கும், பிரதேச நிர்வாகத்திற்கும் உரிய அதிகாரிகளை நியமித்தல்.
- நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தல்
- வரி விதித்தல்
- நீதி சார்நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

**அரசாட்சியில் மன்னனுக்கு உதவிய அதிகாரிகள்**

- யுவராஜன் - எதிர்காலத்தில் அரசனாக உரிமை பெற்றவன்
- சேனாதிபதி
- பொருளாளர்

- ஆவணப்படுத்துபவர் ( ஆவணங்களுக்குப் பொறுப்பான பிரதானி)
- இவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட அரசசபை.
- நாட்டின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாட அரசனின் தலைமையில் அரச சபை கூட்டப்படும்
- அநுராதபுர கால கல்வெட்டுக்களில் **அதெகவரு** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அதெகவரு என்பது சமஸ்கிருத மொழி இதன் பொருள் **பணிப்பாளர்**
- அன அதெக – குதிரைப் பணிப்பாளர்
- அதி அதெக – யானைப் பணிப்பாளர்
- அதெக, அதிக என்பது அதிகாரிகள்.
- திணைக்களம் அல்லது நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதானிகள்
- மானவர்மன் மன்னன் காலத்தில்

  பண்டைய ஆட்சி முறை நடைமுறைக்கு வந்தது. சில கல்வெட்டுக்களில்
    - ஏப்பா (ஆதிபாத)
    - மாப்பா (மஹாதிபாத) ஆகிய பதவிகளை வகித்து மன்னனாக வந்தமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
    - ஏப்பா (ஆதிபாத) மாப்பா (மஹாதிபாத) பதவிகளுக்கு அரச குடும்ப இளவரசர்களே நியமிக்கப்பட்டனர். இதனால் எதிர்கால அரசாட்சிக்குத் தேவையான பயிற்சிகளை உரிய முறையில் பெற்றுக் கொள்ள முடிந்தது.

**பிரதேச ஆட்சி**

- அநுராதபுர காலத்தில் அரசு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- பிரதேச அதிகாரிகள் மூலம் பிரதேசங்கள் நிர்வகிக்கப்பட்டன.
- அநுராதபுரத்தைச் சூழவுள்ள பிரதேசங்கள்
    - வடக்கு
    - தெற்கு
    - கிழக்கு
    - மேற்கு என திசைகளுக்கு ஏற்ப பிரிக்கப்பட்டிருந்தன.
- இதற்கு மேலதிகமாக
    - ரட அல்லது
    - ரட்ட என அழைக்கப்பட்ட ஆட்சிப்பகுதிகளும் இருந்துள்ளது.
- இவற்றின் நிர்வாக அதிகாரிகள்
    - ரட்லது அல்லது
    - ரட்டலத்தன் என அழைக்கப்பட்டனர்.
- தலைநகரிலிருந்து தொலைவில் இருந்த பிரதேசங்கள்
    - மலையரட்டை
    - மாயரட்டை / தக்கிண தேசம்
    - உருகுணு ரட்டை எனப் பிரிக்கப்பட்டிருந்தது.

    இப் பிரதேசங்கள் வெவ்வேறு ஆட்சியாளர்களின் கீழ் இருந்தன.
- நாட்டின் மிகச் சிறிய நிர்வாக அலகு – கிராமம்
- கிராம அதிகாரி – கமிக
- அநுராதபுரத்தின் பிற்பட்ட காலத்தில் கிராம நிர்வாகி – கம்லத்தன் என அழைக்கப்பட்டார்

**அரச கொள்கையும் சமூக நலன்புரி நடவடிக்கைகளும்.**

❖ கொள்கை வகுக்கும் போது அரசர்கள் கவனம் செலுத்திய விடயங்கள்
- நாட்டின் பாதுகாப்பு
- சட்டம், அமைதி
- பொருளாதார மேம்பாடு
- பௌத்த சாசன முன்னேற்றம்

- நாட்டின் பாதுகாப்பு
    - நாட்டின் பாதுகாப்பிற்கு மன்னனுக்கு
        - சேனாதிபதி
        - படையினர்
        - பிரதேச ஆட்சியாளர்கள் உதவினார்கள்.
    - அநுராதபுர காலத்தின் முன்னரைப் பகுதியில் மன்னனின் படைகள்
        - யானை
        - குதிரை
        - இரதம்
        - கலால்படை என நான்கு வகைச் சேனைகள் இருந்தன.
    - மானவர்ம மன்னன் ஆட்சியின் போது
        - மன்னனுடைய படையுடன்
        - தென்னிந்தியப் படை வீரர்களைக் கொண்ட சம்பளம் பெற்ற இராணுவக் குழு ஒன்றும் இருந்துள்ளது.
    - அநுராதபுர மன்னர்கள் நகர நிர்மாணத்தின் போது அதன் பாதுகாப்பில் கவனம் செலுத்தினர். அநுராதபுர நகரம்
        - மதில்
        - வாயில் கதவுகள் என்பவற்றின் முழுமையான பாதுகாப்புடன் கட்டப்பட்டது.
        - உள்நாட்டு
        - வெளிநாட்டு ஆக்கிரமிப்பின் போது
            - கோட்டைகளை நிர்மாணிப்பதும்
            - பாதுகாப்பு இடங்களில் காவலரண்களை அமைப்பதும் பாதுகாப்பு உபாயங்களாக இருந்தன.
- சட்டம் - அமைதி

    அநுராதபுர யுகத்தில்
    - நீதித்துறைக் கட்டமைப்பு முறைப்படுத்தப்பட்டிருந்தது.
    - மானவர்ம மன்னன் கால நீதி தொடர்பான கல்வெட்டுக்களில்
        - காணி உரிமை குறித்த சட்டம்
        - வர்த்தகம் தொடர்பான சட்டம்
        - விவசாயம் தொடர்பான சட்டம்
        - வரி தொடர்பான சட்டம்
        - குற்றவியல் தொடர்பான சட்டம் எனப் பல சட்டங்கள் இருந்தன.
    - கி.பி 10 ஆம் நூற்றாண்டிற்குரிய வேவெல் கெட்டிய கல்வெட்டு அக்காலத்தில் நடைமுறையில் இருந்த சட்டங்கள் பற்றிக் குறிப்பிடும் மிக முக்கிய ஆவணமாகும்.

        அக் கல்வெட்டில்
        - 10 கிராம நிர்வாகம்
        - குற்ற வழக்குகளைத் தீர்க்கும் சட்டங்கள் விபரிக்கப்பட்டுள்ளன.
        - பல இடங்களில் இக் கல்வெட்டின் பிரதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையால் மன்னன் சட்ட திட்டங்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தான் என அறியமுடிகின்றது.
    - அநுராதபுர யுகத்தின் இறுதியில் மன்னர்கள்
        - உயர் அதிகாரிகள்
        - சில நபர்கள்
        - நிறுவனங்கள்

போன்றவற்றிற்கு விசேட அதிகாரங்களை வழங்கியிருந்தமை அந்தானி தூண்களில் பொறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- அந்தானி தூண் - அரச கொடுப்பனவு பற்றிய கல்வெட்டு வகை

- பொருளாதார மேம்பாடு

பொருளாதாரம் முக்கியம்

- அநுராதபுர காலத்தில் மன்னர்கள்
    - குளங்கள்
    - கால்வாய்களை அமைப்பதில் ஆர்வம் காட்டினர்.
- நிர்வாக நடவடிக்கைகளின் போதும் வரி விதிக்கும் போதும் மன்னன் ''பெரசிரித'' படி நடக்க வேண்டி ஏற்பட்டது.
- ''பெரசிரித'' – என்பது முன்பு மன்னர்கள் கடைப்பிடித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகள் ஆகும்.
- மானவர்ம மன்னன் காலத்தில் நாட்டில் அடிப்படை முகாமைத்துவக் கொள்கைகள் நிலவியதற்கான சான்றுகள் உள்ளன.
- நான்காம் மகிந்தனின் மிகிந்தலை சுவர்க்கல்வெட்டு அடிப்படை முகாமைத்துவம் குறித்த முக்கிய ஆவணம். இதில்
    - மிகிந்தலை விகாரையில் உள்ள நிர்வாகம்
    - பௌத்த குருமார் பின்பற்ற வேண்டிய பழக்க வழக்கம்

    தொடர்பாக அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பஞ்சிகா புத்தகம் (கணக்குப் புத்தகம்) – விகாரையின் அன்றாட கணக்கு விபரங்கள் எழுதப்படுவது.

## மன்னர்களின் வைத்திய பணி

| மன்னர்கள் பெயர் | வைத்திய பணி |
|---|---|
| புத்ததாசன் | 10 கிராமங்களுக்கு ஒரு வைத்தியர் வீதம் நியமித்தமை |
| முதலாம் உபதிஸ்ஸன் | பார்வையிழந்தவர்களுக்கும் நோயாளிகளுக்கும் வைத்தியசாலைகள், தானசாலைகளை நிறுவியமை |
| முதலாம் உதயன் | பொலன்னறுவை பதவியாவில் வைத்தியசாலைகளை நிறுவியமை. அவற்றின் செலவிற்காக காணிகளை வழங்கியமை |
| ஐந்தாம் காசியப்பன் | தொற்றுநோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அநுராதபுர நகரத்தில் வைத்திய சாலைகளை நிறுவியதுடன் நகரத்தில் சிகிச்சை நிலையங்களை அமைத்தமை. |

## பௌத்த சாசனத்தின் அபிவிருத்தி

- ❖ பௌத்த சாசனம் இலங்கையில் பரவிய பின் அனைத்து அரசர்களும் பௌத்த சாசன விருத்திக்கு பங்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்.
- ❖ பௌத்தகுருமார் - மன்னனின் அறிவுரையாளர்களாகச் செயற்பட்டனர். இதனால்
- ❖ மன்னனிற்கும் பௌத்த சாசனத்திற்கும் இடையில் சிறந்த தொடர்பு இருந்தது. மன்னர்கள்
    - விகாரைகளை அமைத்தல்
    - அவற்றிற்குக் கிராமங்களை வழங்குதல்
    - பிக்குகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக பிரிவேனாக்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

## பிராந்திய (வலய) அரசியல் போக்கும் வெளிநாட்டுக் கொள்கையும்.

- ❖ இலங்கை மீது நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்திய தென்னிந்திய அரசுகள்
    - பாண்டிய அரசு
    - பல்லவ அரசு
    - சோழ அரசு

- பாண்டிய அரசு
    - தென்னிந்தியாவின் கிழக்குக் கரையில் இலங்கைக்கு மிக அருகில் அமைந்திருந்தது.
    - கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் பலம் வாய்ந்த அரசாக இருந்தது.
    - பாண்டிய அரசின் தலைநகரம் மதுரை
    - இலங்கை மீது தாக்கத்தினை ஏற்படுத்தியது.

- பல்லவ அரசு
    - தென்னிந்தியாவில் சோழ அரசிற்கு வடக்கே பல்லவ அரசு பரந்திருந்தது.
    - பல்லவ அரசின் தலைநகரம் காஞ்சிபுரம்
    - தென்னிந்தியாவில் முதன்முதலாக உருவாகிய பாரிய பேரரசு
    - கி.பி 7 ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் பலம் பொருந்தியவர்களாக இருந்தனர்.
    - கி.பி 9 ஆம் நூற்றாண்டு வரை பல்லவர்களின் அதிகாரம் நிலை பெற்றிருந்தது.
    - மானவர்மன் பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்ம மன்னனின் உதவியைப் பெற்று இலங்கையில் அரசுரிமையைப் பெற்றுக் கொண்டான்.
- சோழ அரசு
    - பாணடிய அரசிற்கு வடக்கே தென்னிந்தியாவின் கிழக்குக் கரைக்கு அருகில் சோழப் பேரரசு அமைந்திருந்தது.
    - சோழப் பேரரசின் தலைநகரம் தஞ்சாவூர்
    - பாண்டியர்களுக்கு எதிராக ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டனர்
    - கி.பி 9 ஆம் - 10 ஆம் நூற்றாண்டுவரை சோழர்கள் மாபெரும் போரரசை உருவாக்கி இருந்தனர்.
    - இலங்கையில் இராஜராஜன், இராஜேந்திரன் ஆகிய சோழ மன்னர்களால் அநுராதபர அரசு வீழ்ச்சியடைந்தது.
    - இலங்கை மன்னர்கள் பாண்டியருக்கு எதிராக பல்லவர்களுடனும் சோழருக்கு எதிராக பாண்டியருடனும் இணைந்து செயற்பட்டனர்.
- இராஷ்டிர கூடர் என்ற இந்திய அரசு எழுச்சி அடையும் போது அவர்களுடன் இலங்கையர் ஒற்றுமையாகச் செயற்பட்டனர்.
- அநுராதபுர காலத்தின் பின்னரைப் பகுதியில் தென்னிந்திய ஆக்கிரமிப்புக்கள் இலங்கை மீது ஏற்பட்டன.
- கி.பி 8 ஆம் நூற்றாண்டு முதல் இந்து சமுத்திர வர்த்தக ஆதிக்கத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன.
- மானவர்ம அரச வம்ச காலத்தில் அநுராதபுர ஆட்சி சிறப்புற்று இருந்தது. எனினும் 5 ஆம் மகிந்தனின் ஆட்சிக் காலத்தில் ( கி.பி 982 – 1017) மத்திய ஆட்சி பலவீனமடைந்து உள்ளக மோதல்கள் தீவிரமடைந்தன.

- ஐந்தாம் மகிந்தன்
    - காலத்திற்குக் காலம் இலங்கைக்கு வந்த படைகள் அநுராதபுரத்தில் தங்கியிருந்தன.
    - நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்திருந்ததினால் படையினருக்கு சம்பளம் கொடுக்க அரசனால் முடியவில்லை.
    - இதனால் தென்னிந்திய படையிநர் அரச மாளிகையைச் சுற்றி வளைத்தனர்
    - 5 ஆம் மகிந்தன் பாதுகாப்புத் தேடி உருகுணைக்குத் தப்பிச் சென்றான்.
    - இராஜேந்திரன் அநுராதபுரத்தை ஆக்கிரமித்தான்
    - சோழர்கள் அநுராதபுரம், பொலன்னறுவை உட்பட்ட இராசரட்டையின் பெரும் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டனர்.
    - சோழப் பேரரசின் ஒரு பகுதியாக இராசரட்டைப் பிரதேசத்தை ஆட்சி செய்தனர்.
    - 14 நூற்றாண்டு காலமாக நாகரிகத்திற்கு அடித்தளமிட்டிருந்த அநுராதபுர இராசதானி 1017 இல் வீழ்ச்சியடைந்தது.

- 70 அண்டுகள் சோழரின் ஆட்சியின் கீழ் இருந்தது.

## மகா விஜயபாகு / முதலாம் விஜயபாகு (கி.பி 1055 – கி.பி 1110)

- சிறுவயதில் கீர்த்தி / கித்தி என அழைக்கப்பட்டான்.
- தந்தை – மஹாசாமி மொக்கல்லான
- தாய் - லோகிதா தேவி
- தளபதி – சித்தாரும்பி புத்தனாயக்கா / புதல்னா / புத்தராஜா
- அறிவதற்கு உதவும் வரலாற்று மூலங்கள்
    - மகாவம்சம்
    - பனாகடுவ செப்பு சாசனம்
    - அம்பகமுவ கல்வெட்டு
- சோழர் ஆட்சி

- கி.பி. 1017 இல் தென்னிந்திய சோழப்பேரரசன் முதலாம் இராஜேந்திரன் இலங்கையை ஆக்கிரமித்து 5 ஆம் மகிந்தனைக் கைது செய்து சோழப் பேரரசிற்குக் கொண்டு சென்றான்.
- கி.பி. 1017 – கி.பி 1070 வரை இலங்கையில் சோழராட்சி
- சோழர்கள் நாட்டின் அரசுரிமையாளர்களாகிய இளவரசர்களைக் கொலை செய்தனர்.
- 5 ஆம் மகிந்தனின் மகன் காசியப்பன் ( விக்கிரமபாகு)
- 5 ஆம் மகிந்தன் கி.பி. 1029 இல் சோழநாட்டில் இறந்தான்
- சோழர்களுக்கு எதிராக உருகுணையில் எதிர்ப்பு இயக்கம் ஆரம்பித்தது.
- இதனைத் தடுப்பதற்கு சோழர்கள் மேற்கொண்ட தந்திரோபாயங்கள்
    - பொலன்னறுவையில் இருந்து உருகுணுரட்டைக்குப் படையெடுத்து உருகுணையிலுள்ள வளங்களை அழித்தமை.
    - உருகுணை அரசிற்கு உரிமையுடையவர்களைக் கொலை செய்தமை
    - இதன் மூலம் உருகுணையில் அரசியல் ரீதியில் உறுதியற்ற நிலையை உருவாக்க சோழர்கள் முயன்றனர்.
    - முதலாம் விஜயபாகு உருகுணையில் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் அப்பிரதேச ஆட்சியாளரிடையே ஒற்றுமை இருக்கவில்லை. இதனை சோழர்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

### முதலாம் விஜயபாகு உருகுணை அரசன்

- உருகுணையின் சித்தாரும்பி புத்தநாயக்க / புதல்னா / புத்தராஜா முதலாம் விஜயபாகு உள்ளிட்ட அரச குடும்பத்தினருக்குப் பாதுகாப்பு வழங்கினார். அரசாட்சி பெறுவதற்கு உதவினார்.
- புததராஜ சேனாதிபதியின் சேவைகள் தொடர்பாகக் கூறும் செப்பேடு – பனாக்கடுவ செப்பேடு
- பனாக்கடுவ செப்பேடு
    - தென்பகுதியில் மொரவக்க கோறளையில் பனாகடுவ கிராமவயலில் கண்டெடுக்கப்பட்டது.
    - முதலாம் விஜயபாகு மன்னனின் இளமைக்காலம் தொடர்பான விபரங்கள் உள்ளது.
    - இளமையில் அவன் உணவு, நீர் இன்றி அனுபவித்த துன்பங்கள் கூறப்பட்டுள்ளது.
    - முதலாம் விஜயபாகு, அவரின் பெற்றோருக்கு சேனாதிபதியான புத்தனாயக்கா பாதுகாப்பு வழங்கிய விபரங்கள் உள்ளது.
    - புத்தராஜா சேனாதிபதியின் சேவைகள் முதலிய விடயங்கள் இதில் உள்ளது.

### முதலாம் விஜயபாகு மன்னனின் குண இயல்புகள்

- பகைவரிடமிருந்து நாட்டை மீட்பதற்கு சிறுவயது முதல் அக்கறையுடன் செயற்பட்டமை
- முதலில் உருகுணையில் ஆட்சி உரிமையைப் பெறுவதற்கு யுத்தம் புரிய வேண்டி ஏற்பட்டது.
- உருகுணை ஆட்சியாளன் கேசதாது காசியப்பனோடு யுத்தம் செய்தான். புத்தராஜா உதவினார்.
- இதில் கேசதாது காசியப்பன் தோற்கடிக்கப்பட்டான்.

- இளவரசன் சீரத்தி 1055 இல் கதிர்காமத்தை ஆட்சி மையமாகக் கொண்டு 1 ஆம் விஜயபாகு என்ற பெயரில் மன்னனானான்.

**இலங்கையைச் சோழராட்சியில் இருந்து மீட்டெடுத்தல்.**

- முதலாம் விஜயபாகு அதிகாரம் பெற்றதும் சோழர் உருகுணையை ஆக்கிரமித்தனர்.
- அரசன் தன் அதிகாரத்தை நிலைநாட்ட முன் மன்னனின் படைகளை அழிப்பது சோழரின் நோக்கமாக இருந்தது.
- ஆனால் மன்னன் மலைநாட்டிற்குத் தப்பிச் சென்றான்.
- சோழர்கள் உறுகுணையைக் கொள்ளையடித்து பொலன்னறுவைக்குச் சென்றனர்.
- மீண்டும் உறுகுணைக்குச் சென்ற 1 ஆம் விஜயபாகு
    - எதிர்கால யுத்தத்திற்குத் தேவையான உதவிகளைப் பெறுவதற்காக
        - பர்மா/ ரமஞ்ஞுதேசம் நாட்டுடன் தொடர்பினை ஏற்படுத்தினான்.
- இராசரட்டை மக்கள் சோழர்களுக்கு வரி செலுத்துவதனை நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படுகின்றது.
- இதனை அறிந்த சோழப் பேரரசன் பொலன்னறுவை சோழப் பிரதிநிதி ஆட்சியாளனுக்கு படை உதவி அனுப்பினான்.
- பலமடைந்த சோழர்கள் மீண்டும் உருகுணைப் பிரதேசத்தினை ஆக்கிரமித்தனர்.
- இதில் சோழர்கள் தோல்வி அடைந்தனர்.
- இதனைச் சாதகமாகப் பணன்படுத்திய மன்னன் பொலன்னறுவையைத் தாக்கிக் கைப்பற்றினான்.
- மீண்டும் சோழருக்குப் படை உதவி கிடைத்தது.
- இப்போரில் மன்னன் விஜயபாகு தோல்வி அடைந்தான்
- தனது பாதுகாப்பிற்காகக் கேகாலை மாவட்டத்தின் வாகிரிகலைக்குத் தப்பிச் சென்றான்.
- இதன்பின் தன் படைகளை ஒழுங்கமைத்தான்.
- அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மகாநாகுல பிரதேசத்திற்குச் சென்று இறுதியுத்தத்திற்கு ஆயத்தமானான்.
- கி.பி. 1070 இல் பொலன்னறுவையை ஆக்கிரமித்தான்.
- இந்தியாவில் இருந்து சோழப்படையின் உதவி கிடைப்பதனைத் தடுப்பதற்காக மகாதித்த துறைமுகத்திற்குப் படை ஒன்றினை அனுப்பினான்.
- இந்த யுத்தத்தில் முதலாம் விஜயபாகு வெற்றிபெற்றான்.
- 1070 இல் பொலன்னறுவையைக் கைப்பற்றி 70 வருட சோழராட்சியை முடிவிற்குக் கொண்டு வந்தான்.
- இந்தியாவின் அதிக பலம் வாய்ந்த சோழப் பேரரசுடன் யுத்தம் புரிந்து இலங்கையை சோழரின் ஆட்சி அதிகாரத்தில் இருந்து விடுவித்தமை விஜயபாகுவால் மேற்கொள்ளப்பட்ட பாரிய சேவை ஆகும்.

**முதலாம் விஜயபாகு ஆட்சிக்காலம்.**

- முதலாம் விஜயபாகு 1070 ஆம் ஆண்டு முதல் 40 வருடங்கள் இலங்கையை ஆட்சி செய்தான்.
- இக் காலத்தில் பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு மீண்டும் ஒருமுறை ஐக்கியமானதும், சமாதானமான இலங்கை ஒன்று உருவாகியது.
- பொலன்னறுவை யுகத்தின் முதல் மன்னன் விஜயபாகு

**முதலாம் விஜயபாகுவின் பணிகள்**

- ஏப்பா, மாப்பா பதவிகள் ஏற்படுத்தப்பட்டு பாரம்பரிய முறையிலான நிர்வாகம் மீண்டும் உருவாக்கப்பட்டது

- நீர்ப்பாசனத் திட்டங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டது.
- பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது.
- அநுராதபுரத்தில் அரசமாளிகை அமைத்தான்.

**முதலாம் விஜயபாகு மன்னனின் வெளிநாட்டுக் கொள்கை**

- சோழர்களின் ஆக்கிரமிப்பைத் தவிர்த்துக் கொள்ளல்
- அயல் நாடுகளுடன் வர்த்தக உறவுகளைக் கட்டி எழுப்புவது – பிரதான வெளிநாட்டுக் கொள்கை.
- சோழ ஆக்கிரமிப்பில் இருந்து இலங்கையைப் பாதுகாப்பதற்காக இந்தியாவில் சோழருக்கு எதிரான அரசுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தினான். ( பாண்டிய நாடு, கலிங்க தேசம்)

**முதலாம் விஜயபாகுவின் திருமண உறவு.**

- சகோதரி மித்தாவை பாண்டிய இளவரசனுக்குத் திருமணம் செய்து வைத்தான்.
- முதலாம் விஜயபாகு கலிங்க வம்ச இளவரசி திரிலோக சுந்தரியை இரண்டாவது தடவையாக திருமணம் செய்தான்.
- தூதுவர்கள் மூலம் பரிசுப் பொருட்களை அனுப்பி சாளுக்கிய அரசவம்சத்துடன் நட்புறவைப் பேணினான்.
- இலங்கையின் பொருளாதார, பௌத்த சாசன வளர்ச்சிக்காக பர்மாவுடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டான்.

**முதலாம் விஜயபாகுவின் சமய நடவடிக்கைகள்.**

- பர்மாவிலிருந்து பிக்குமாரை வரவழைத்து உபசம்பதா விழாவை நடத்தினான்.
- பொலன்னறுவையில் மூன்றடுக்கு தலதாமாளிகையை அமைத்தான்.
- சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பாதையைச் சீரமைத்து சிவனொளிபாத மலைக்குக் கிராமங்களை வழங்கியமை.
- அநுராதபுரம், உருகுணையில் உள்ள விகாரைகளைப் புனர்நிர்மாணம் செய்தமை

**முதலாம் விஜயபாகு மன்னனிடமிருந்து பெறக்கூடிய முன்மாதிரிகள்**

- சிறுவயதில் அனுபவித்த துன்பங்களைக் கூறியமை – நேர்மை
- புத்தநாயக்கவிற்கு பரிசிலகள் வழங்கியமை – செய்நன்றிமறவாமை
- சோழ யுத்தத்துடன் தோல்வியடைந்த போது – தொடர்ந்து முயற்சிக்கும் குணம்
- வெளிநாட்டு ஆக்கிரமிப்பில் கவனம் செலுத்தியமை.
- முதலாம் விஜயபாகுவின் குணாம்சங்கள் - அம்பகமுவ கல்வெட்டு

**அம்பகமுவ கல்வெட்டில் உள்ள விபரங்கள்**

- மும்மணிக்கு – பணிவிடை
- ஆசான்களுக்கு – அடிபணிதல்
- தார்மீகமக்களுக்கு – மரியாதை
- கல்விமான்களுக்கு – சௌபாக்கியம்
- உறவினர்களுக்கு – அனுசரணை
- நண்பர்களுக்கு – நட்பு
- பகைவருக்கு – தோல்வி
- அனைத்து உயிரினங்களுக்கும் - கருணை
- சபைக்கு - அறிவு
- தமக்கு – நிறைவு

**மகாபராக்கிரமபாகு மன்னன் / முதலாம் பராக்கிரமபாகு**

- பிளவுபட்டிருந்த இலங்கையை ஒன்றுபடுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்கு அளப்பரிய சேவைகளை ஆற்றினான்.
- முதலாம் விஜயபாகு மன்னனின் பின்
    - கலிங்க வம்ச, பாணடிய வம்ச ஆதரவாளர்களுக்கு இடையே அரசுரிமை குறித்து மோதல்கள் ஏற்பட்டது.
    - நிலையான ஆட்சி ஏற்படவில்லை. அதனால்
        - இராசரட்டை
        - தக்கிணதேசம்
        - உருகுணை என நாடு பிரிவடைந்திருந்தது.
- இப் பின்னணியில் முதலாம் பராக்கிரமபாகு பிறந்தான்.

**முதலாம் பராக்கிரமபாகு**

தந்தை – மானாபரணன் (இளவரசி மித்தாவின் 1 ஆம் மானாபரணன்) மகன்
தாய் - இரத்னாவலி
1 ஆம் மானாபரணன் - தக்கிண தேச அட்சியாளன் (தெதிகம)

- தெதிகம கொட்ட வெஹெர அல்லது
- சுதிகர சைத்தியம் - முதலாம் பராக்கிரமபாகு பிறந்த இடத்தில் அமைக்கப்பட்ட விகாரை
- முதலாம் பராக்கிரமபாகுவின் சிறுவயதில் 1 ஆம் மானாபரணன் இறப்பு
- சிறிய தந்தை – கீர்த்தி ஸ்ரீ மேவன் தக்கிண தேச ஆட்சியாளன் முதலாம் பராக்கிரமபாகுவிற்கு பாதுகாப்பு வழங்கினான்.
- கீர்த்தி ஸ்ரீ மேவன் பராக்கிரமபாகுவிற்கு
    - மொழி
    - வில்வித்தை
    - யானைப்பயிற்சி போன்ற விடயங்களைக் கற்பித்தார்.

- முதலாம் மானாபரணனின் பின் தக்கிண தேச ஆட்சியாளன் - கீர்த்தி ஸ்ரீ மேவன்
- கீர்த்தி ஸ்ரீ மேவன் மரணத்தின் பின் தக்கிண தேச ஆட்சியாளன் - 1 ஆம் பராக்கிரமபாகு

**தக்கிண தேசத்தில் பராக்கிரமபாகுவின் பணிகள்**

- பராக்கிரமபுரம் என்னும் புதிய நகரமொன்றைக் ( தற்பொழுது – பண்டுவஸ்நுவர) கட்டினான்.
- பொருளாதார ரீதியில் முன்னேற்றினான்.
  "விண்ணிலிருந்து விழும் ஒரு துளி நீரேனும் விவசாயத்திற்குப் பயன்படாது வீணே கடலைச் சென்றடையக் கூடாது." என்ற கொள்கையுடன் மன்னன் செயற்பட்டான்.
- தெதுரு ஓயாவின் நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்காக மூன்று இடங்களில் அணைகட்டி நீரைத் திசை திருப்பினான். அவ்விடங்கள்
    - கொட்டபத்த
    - சூக்கர நிஜ்கர
    - தோரதக்கித
- தெதுறு ஓயாவில் ரிதிபெந்தி அணைகட்டப்பட்டது.
- சிறிய குளங்களைப் பெருப்பித்தல், குளங்களின் அணைகளைச் சீர்திருத்துதல் போன்றவற்றைச் செய்தான்.
- களுகங்கை, பெந்தர கங்கைக்கு இடையே அமைந்துள்ள பஸ்துன் கோறளை சதுப்பு நிலங்களில் நீரை வழிந்தோடச் செய்து அந்த இடங்களை அபிவிருத்தி செய்தான்.
- பராக்கிரமபாகு தக்கிணதேச ஆட்சியாளனாக இருந்த போது பொலன்னறுவை ஆட்சியாளன் விக்கிரமபாகு
- அவனது மரணத்தின் பின் அவனது மகன் 2 ஆம் கஜபாகு மன்னனானான்.
- உறுகுணை ஆட்சியாளன் சிபல்லவன் மரணமடைந்ததைத் தொடர்ந்து அவன் மகன் 2 ஆம் மானாபரணன் உருகுணை ஆட்சியாளனானான்.
- பொலன்னறுவை ஆட்சியைப் பெற்றுக் கொள்வதற்காக
    - முதலாம் பராக்கிரமபாகு
    - இரண்டாம் கஜபாகு

- இரண்டாம் மானாபரணன் ஆகியோரிடையே போட்டி ஏற்பட்டது.

இதன்போது

- முதலாம் பராக்கிரமபாகுவிற்கும் - இரண்டாம் கஜபாகுவிற்கும் இடையே 2 ஆம் மானாபரனுக்கு எதிராக உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டது.

உடன்படிக்கை

- முதலில் ஒருவர் இறந்ததன் பின் மற்றவருக்கு அரசுரிமை.
- இது கல்வெட்டாக எழுதப்பட்டது.
- இக்கல்வெட்டு குருணாகல் மாவட்டத்தில் சங்கமுவ விகாரையில் கண்டுபிடிக்கப்பட்டது. அது “சங்கமுவ விகாரைக் கல்வெட்டு” எனப்பட்டது.
- உடன்படிக்கையின் பின்பும் 2 ஆம் மானாபரணன் போர் செய்வதை நிறுத்தவில்லை.
- 2 ஆம் கஜபாகுவின் மரணத்தின் பின் 2 ஆம் மானாபரணன் 1 ஆம் பராக்கிரமபாகுவுடன் போரில் ஈடுபட்டான்.
- இப் போரில் மானாபரணன் தோல்வியடைந்து உருகுணைக்குத் தப்பிச் சென்றான்.
- பொலன்னறுவை ஆட்சியை முதலாம் பராக்கிரமபாகு கைப்பற்றினான்.
- சிறிது காலத்தில் 2 ஆம் மானாபரணன் உருகுணையில் இறந்தான்.
- 2 ஆம் மனாபரணனின் தாய் சுகலாதேவி அவள் அப்படைக்குத் தலமைதாங்கி பராக்கிரமபாகுவிற்கு எதிராகப் போரிட்டாள்
- ஆட்சியின் சின்னமாக விளங்கிய தந்ததாதுவும், பத்திரதாதுவும் சுகலாதேவியிடம் இருந்தது.
- புனித சின்னங்களை வைத்துக் கொண்டு போரிட்டாள்.
- சுகலாதேவியினுடான போரில் பராக்கிரமபாகு வெற்றி பெற்றான்.
- தந்ததாதுவும், பாத்திரதாதுவையும் பெற்றுக் கொண்டான்.
- கி.பி.1153 இல் முதலாம் பராக்கிரமபாகு மன்னன் தலமையில் ஒன்றுபட்ட ஓர் நாடு உருவாகியது.

**பொலன்னறுவை ஆட்சியாளனான் பராக்கிரமபாகுவின் பொருளாதாரப் பணிகள்**

- தோப்பாவாவி
- தும்புளுவாவி ஆகியவற்றை இணைத்து பராக்கிரம சமுத்திரத்தினை அமைத்தான். இவனது காலத்தில் 3910 கால்வாய்களும் 163 குளங்களும் அமைத்ததாக சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- சிறு குளங்கள். அணைகள் போன்றவற்றையும் அமைத்தான்.

**பௌத்த சமயப் பணிகள்**

- பிக்குகளின் முப்பிரிவினையும் ஒன்றிணைத்து சங்கத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தினான்.
- பொலன்னறுவை கதிக்காவ (ஒழுக்கக் கோவை) யை உருவாக்கினான்.
- இவ் ஒழுக்கக் கோவை ( கத்திகாவத) பொலன்னறவையின் உத்தரராம என்னும் கல்விகாரையின் கற்றூணில் எழுதப்பட்டுள்ளது.
- பொக்குல் விகாரை, கிரி விகாரை, பபுலு விகாரை என்பன இவனால் அமைக்கப்பட்ட விகாரைகள் ஆகும்.
- அநுராதபுர விகாரைகளைப் புனர்நிர்மாணம் செய்தான்.

**முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் வெளிநாட்டுக் கொள்கை**

- பர்மா (ரமஞ்ஞதேசம்), தென்னிந்தியா ஆகிய நாடுகளுடன் தொடர்பு வைத்திருந்தான்.
- இலங்கைக்கும் பர்மாவிற்குமிடையே வர்த்தகம், சமயத்தொடர்பு நீண்டகாலமாக நிலவியது.
- பர்மாவிற்கும் இலங்கைக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.
- பர்மாவின் மன்னன் - அலவுங்சித் மன்னனின் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கவில்லை.
- பர்மா - இலங்கைப் போர்.
- சேனாதிபதி – நகரகிரிகீர்த்தி தலமையில் கடற்படை ஒன்று பர்மாவிற்கு அனுப்பப்பட்டுள்ளது பர்மாவை ஆக்கிரமித்து வெற்றிபெற்றது.
- போரில் வெற்றி பெற்ற சேனாதிபதி நகரகிரி கீர்த்திக்கு மன்னன் கிராமங்களை வழங்கினான்.
- இது தொடர்பான விபரங்கள் தெவனகல கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இலங்கை – பாண்டிய நாடு ஆக்கிரமிப்பு**

- இந்தியாவில் பாண்டிய அரசின் ஆட்சியுரிமை தொடர்பான மோதலின் போது முதலாம் பராக்கிரமபாகு தலையிட்டான்
- பாண்டிய அரசின் ஆட்சியாளன் பராக்கிரம பாண்டியன்.
- பராக்கிரம பாண்டியனுக்கு எதிராகப் போரிட்டான் - குலசேகரன்
- பராக்கிரம பாண்டியன் முதலாம் பராக்கிரமபாகுவின் உதவியை நாடினான்.
- லங்காபுர, ஜகத் விஜய என்ற இரு சேனாதிபதிகளின் தலைமையில் பாண்டிய நாட்டிற்கு படை அனுப்பப்பட்டது.

**நிசங்கமல்ல மன்னன்**

- முதலாம் பராக்கிரமபாகு மன்னனுக்குப் பின் பொலன்னறுவையை ஆட்சி செய்த மன்னர்களுள் நிசங்கமல்லன் முக்கியம் பெறுகின்றான்.
- முதலாம் பராக்கிரம பாகுவிற்குப் பிள்ளைகள் இல்லாதினால் 2 ஆம் விஜயபாகு அரசனானான்.
- 2 ஆம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் சகோதரியின் மகன்.
- 2 ஆம் விஜயபாகு மன்னன் காலத்தில் உபராஜா – நிசங்கமல்லன்
- 2 ஆம் விஜயபாகுவின் ஆட்சிக் காலம் - 1 வருடம்
- 2 ஆம் விஜயபாகு கொலை செய்யப்பட்டு அரசனானவன் - மகிந்த
- மகிந்த அரசனாகிய 5 நாட்களில் அவனைக் கொலை செய்து நிசங்கமலலன் அரசனானான்.

**நிசங்க மல்லன் எதிர் நோக்கிய சவால்கள்**

- வெளிநாட்டில் பிறந்த, கலிங்க வம்சத்தைச் சேர்ந்தவனாக இருந்தமை.
- தந்தை – ஜய கோபன் ( இந்தியா – கலிங்கம்)
- வம்சம் - கலிங்க வம்சம்
- இவனது காலத்தில் பொலன்னறுவை வழங்கப்பட்ட பெயர் - கலிங்கபுரம்.
- இதுவரை இலங்கையை ஆட்சி செய்த கலிங்க வம்சத்தவர்கள் இலங்கையில் பிறந்தவர்கள்.
- ஆனால் நிசங்கமல்லன் இந்தியாவில் கலிங்க தேசத்தில் பிறந்தவன்.
- பூர்வீகம் வெளிநாடாக இருந்தமை இவன் எதிரநோக்கிய சவாலாகும்.
- முதலாம் பராக்கிரமபாகுவின் சிறந்த சேனாதிபதிகளைத் தன்வசப்படுத்தல்
- பாண்டியர்களின் எழுச்சியைத் தடுத்தல்
- உருகுணையைத் தன்வசப்படுத்திக் கொள்ளுதல்.
- இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மன்னன் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மக்களின் மனதினைக் கவரும் வகையில் செயற்பட்டான்.
- நீண்ட கல்வெட்டுக்கள் அமைத்து மக்களுக்கு அறிவுரை வழங்கினான்.
  - தம்புள்ள விகாரை
  - சிவனொளிபாத மலை

  யாத்திரை செய்த இடங்கள்

நிசங்மல்ல மல்லனின் நடவடிக்கைகள்

- துலாபாரக் கொடை வழங்கினான் துலாபாரக் கொடை என்பது ஒருவரின் உடலின் நிறைக்கு சமமாக வழங்கப்படும் பொருட்கள்
- ஒன்பது ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்தான்
- கல்வெட்டுக்கள் நாடு முழுவதும் காணப்படுவதிலிருந்து ஆதிக்கம் பரவியிருந்ததை அறிய முடிகின்றது.
- மக்களின் விசுவாசத்தினைப் பெற்றுக் கொண்டான்
- நாடு முழுவதும் பிரயாணம் செய்தான்
- நாட்டுமக்களின் நலன்கருதிப் பணி ஆற்றினான்
- நாட்டு மக்களுக்கு செல்வங்களை வழங்கினான்
- திருடர், பகைவர் தொல்லைகளை நீக்கினான்
- எளியோரைக் கவனித்தான்.

- இவை கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.
- நிசங்க மல்லனின் பணிகள் காணப்படும் கல்வெட்டுக்கள்
    - பொலன்னறுவை அட்டதாகே கல்வெட்டு
    - தம்புள்ள பாறைக் கல்வெட்டு
    - வாதுரூப்பே கல்வெட்டு
- வரிச் சுமைகளைக் குறைத்தான்
- பழைய அரசர்கள் பல வரிகளை நீக்கியதுடன் வரிச்சலுகைகளையும் வழங்கினான்.

**நிசங்கமல்லன் அமைத்த சமயக் கட்டடங்கள்**

- தந்ததாது வைப்பதற்காக தலதாமாளிகையை அமைத்தான்.
- அது அட்டதாகே எனப்பெயர் பெற்றது.
- ரன்கொத் விகாரை
- வட்டதாகே
- நிசங்கலதா மண்டபம் போன்றவற்றை அமைத்தான்
- பொலன்னறுவை நிசங்கமல்ல இராஜசபை மண்டபம் அமைத்தான்
- அதில் இராஜசபையின் நடவடிக்கைகள் இடம் பெற்றது.
- அங்கு காணப்படும் கற்றூண்களில் இராஜசபை அதிகாரிகள் அமரும் இடங்கள் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்பாகும்.

# வரலாறு

## தரம் 7 அலகு 3 எமது கலாசார மரபுரிமைகள்

| பண்பாட்டு மரபுரிமைகள் | கலாசார மரபுரிமைகள் |
|---|---|
| பாரிய குளங்கள் | வழிபாடுகள் |
| அணைகள் | பழக்கங்கள் |
| புரப்பளவு | நம்பிக்கைகள் |
| தொழில்நுட்பம் | நாட்டார் பாடல்கள் |
| | ஆடல்கள் |
| | கர்ணபரம்பரைக் கதைகள் |
| | கலைநுட்பங்கள் |
| | சம்பிரதாய வைத்திய முறைகள் |

**பண்டைய மரபுரிமைகள்**

- சடங்குகள்
- சம்பிரதாயங்கள் } விவசாயம்

**இலங்கையின் கலாசார மரபுரிமைகள்**

| **தொட்டு உணரக் கூடியவைகள்** | **தொட்டு உணர முடியாதவை**(பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றப்படுபவை) |
|---|---|
| சமய வழிபாட்டு நிலையங்கள் | சம்பிரதாயங்கள் |
| பூங்காக்கள் | சடங்குகள் |
| வரலாற்று இடங்கள் | பழக்க வழக்கங்கள் |
| கட்டடங்கள் | பெரியோரை வணங்குதல் |
| அரச மாளிகைகள் | சமய வழிபாடு |
| கோட்டைகள் | |
| ரன்மசு பூங்கா, நிஸ்ஸங்க லதா மண்டபம் | |

**குறிப்பிட்ட இனத்திற்குரிய தொட்டு**

**உணர முடியாத மரபுரிமைகள்** **தொட்டு உணரக் கூடிய மரபுரிமைகள்**

| |
|---|
| சம்பிதாயங்கள் |
| மொழிகள் |
| நாட்டார் பாடல்கள் |
| ஆடல்கள் |
| கலை தொடர்பான அறிவு |
| பழக்கவழக்கங்கள் |
| வழிபாடு |
| நம்பிக்கைகள் |

இலங்கையில் தொட்டுணரக் கூடிய பாரம்பரயங்கள் பல காணப்படுகின்றன. இதற்கான சான்றுகள்

தொல்பொருட்கள்

மேம்பாடடைந்த நீர்ப்பாசனம் இலங்கையின் தனித்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

உலகின், இலங்கையின் தனித்துவத்தினை எடுத்துக் காட்டுவதற்கு இக் கலாசார மரபுரிமைகள் உதவுகின்றன

| உலகின் ஏனைய நாடுகளுக்கு இணையாக இலங்கையிலுள்ள மரபுரிமைகள் |
|---|
| இலங்கையின் |
| பண்டைய குளங்கள் |
| அணைகள் |
| வாவிகள் - தொழில்நுட்பம் |
| கருங்கல் நிர்மாணங்கள் |
| ஆம்பன்கே மரச்செதுக்கல்கள், சிகிரிய |

- இவை எமது முன்னோர்களால் எமக்கு அளிக்கப்பட்டவை.
- இலங்கையின் தனித்துவத்தினை எடுத்துக் காட்டும் உயிரோட்டமான காடசிகளாகும்.

**உலக கலாசார மரபுரிமைகள்**

- மரபுரிமை தொடர்பான விடயங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் விஞ்ஞான பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.
- மரபுரிமைகளுக்கு அழிவோ, சேதமோ ஏற்படாது பாதுகாப்பது யுனஸ்கோ அமைப்பின் நோக்கமாகும்.
- கி.பி. 2011 இல் யுனஸ்கோவினால் 704 கலாசார மரபுரிமைகள் உலக மரபுரிமைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இதில் 6 இலங்கையில் உள்ளன.

**உலக கலாசார மரபுரிமைகளத் தெரிவு செய்யும் போது யுனஸ்கோ கவனத்தில் கொள்ளும் விடயங்கள்**

- மனிதனின் உன்னதமான ஆக்கத்திறனுள்ள அல்லது அறிவினை வெளிப்படுத்தும் ஆக்கங்கள்
- கலாசாரம் ஒன்றிற்குரிய
  - கட்டடக் கலை
  - நகர அமைப்பு
  - கலை
  - தொழில்நுட்பம்

  போன்றவற்றை எடுத்துக் காட்டும் ஆக்கங்கள்
- தற்போது காணப்படும் அல்லது அழிந்துள்ள பண்பாட்டில் பண்பாடு நிலவியமைக்கான சான்று
- மனித வரலாற்றின் முக்கிய சந்தர்ப்பங்களை எடுத்தக் காட்டும் கட்டடம் அல்லது தொழல்நுட்பம்.
- தவிர்க்க முடியாத காரணத்தினால் அழிவிற்கு உள்ளாகும், அச்சுறுத்தல்களுக்கு உள்ளான பழைய பண்பாட்டு நிலங்கள் அல்லது சமூக வசிப்பிடங்கள் அலலது அதற்குரிய நினைவுச் சின்னம்.

**பழைய மொசஞ்சதாரோ நகர்.**

- பண்டைய நகர அமைப்பு - இன்றைய பாகிஸ்தான் நாட்டில் அமைந்துள்ளது.
- அழிவுற்ற பண்பாடாக, பண்டைய நகர அமைப்பிற்குச் சான்றாக உலக தொழில்நுட்ப பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

**சீனப் பெருஞ் சுவர்.**

- சீனாவில் அமைந்துள்ளது.
- பண்டைய பாதுகாப்புச் சுவர்
- உலக பண்பாட்டுப் பாரம்பரியம்
- சீன நாட்டின் முக்கிய அடையாளம்.

**இலங்கையில் அமைந்துள்ள உலக மரபுரிமைச் சின்னங்கள்**

1. பழைய அநுராதபுர நகரம்
2. பழைய பொலன்னறுவை நகரம்
3. சீகிரியா
4. ரன்கிரி தம்புள்ள குகை விகாரை
5. தலதா மாளிகை உட்பட்ட கண்டி நகரம்
6. காலிக் கோட்டை

இவற்றின் மூலம் இலங்கையின்

- உயர்மட்ட வரலாறு
- பண்பாட்டு முக்கியத்துவங்களை உலகம் அறியக் கூடியதாக உள்ளது.
- இலங்கையின் பண்டைய பெருமை உலகிற்கு வெளிப்படுத்தப்படுகின்றது.
- இலங்கையின் வரலாற்று மரபுரிமைகளைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாப்பது எமது கடமையாகும்.

1. பழைய அநுராதபுர நகரம் இங்கு
    - ஸ்ரீமகாபோதி
    - ரூவன்வெலிசாயா
    - லோவமகாபாய
    - அபயகிரி
    - ஜேத்தவனராமய
    - குட்டம் பொய்கை ( இரட்டைத் தடாகம்)
    - யானைப் பொய்கை
    - இசுறுமுனி
    - ரன்மசு உத்தியானத் தடாகம் உள்ளடக்கப்பட்டுள்ளது.
    - 1982 இல் உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது

2. **பண்டைய பொலன்னறுவை நகரம்.**

- 12ஆம் 13 ஆம் நூற்றாண்டில் முக்கிய நகரம்
- சிதைவடைந்த பௌத்த, இந்து வழிபாட்டுத்தலங்கள் அரசர்களின் சிறந்த நிர்மாணங்கள் இங்கு காணப்படுகின்றது.
- வட்டதாகே
- திவங்கசிலை மனை
- ரண்கொத் விகாரை
- கிரி விகாரை
- லங்காதிலக
- அரச மாளிகை
- நிசங்கலதா மண்டபம்
- கல்விகாரை
- சிவன் கோவில் (தேவாலயம்)
- சத்மஹல்பிரசாதய
- பராக்கிரம சமுத்திரம்
- 1982 இல் உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டது

1. **சிகிரியா**
    - முதலாம் காசியப்ப மன்னன் காலத்தில் உருவாக்கப்பட்டது.
    - தந்தை – தாதுசேனன்
    - சகோதரன் - முகலன்
    - சிகிரியா பழைய கோட்டை
    - அரச மாளிகை
    - கலைக்கூடம் முக்கியமானவை.
    - 1982 இல் உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

சிகிரியாவில் உள்ள

- சிறந்த கட்டடக்கலை
- பளிங்குச் சுவர்
- படிக்கட்டு

- ஓவியம்
- சிங்கத்தின் வாய்
- பூங்கா
- நீர்த்தேக்கம்
- குளியல் தடாகம்
- அகழி – பாதுகாப்பு அரணாகவும், கலையரங்காகவும் உள்ளது.

சிகிரியக் கட்டடக்கலை

- கடல்மட்டத்தில் இருந்து 1214 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
  - மலையில் உள்ள கற்பாறையின் உச்சியில்
  - பழைய அரசமாளிகையையும் ஏனைய கட்டடங்களின் அழிவுச் சின்னங்களையும் காணலாம்.
- பாறை உச்சியில் அழிவுகளுடன் கூடிய பிரதேசம் 3.5 ஏக்கர்
- உச்சி வரை அமைக்கப்பட்ட
  - படிக்கட்டு
  - பாலம்
  - பாதுகாப்புச் சுவர்

  என்பவற்றுடன் வியப்பிற்குரிய நிர்மாணமாகக் காணப்படுகின்றது.
- பாரிய சிங்க உருவம் காரணமாக இந்த இடம் சீகிரியா என அழைக்கப்படுகின்றது.
- போக்குவரத்துப் பாதையில் பாதுகாப்புக் கருதி அமைக்கப்பட்டிருந்த நீண்ட பாதுகாப்புச் சுவரின் உட்பகுதி செப்பனிட்டு அமைக்கப்பட்டது.
- இது பளிங்குச்சுவர் அல்லது கண்ணாடிச்சுவர் எனப்படுகின்றது.
- இதில் எழுதப்பட்டிருக்கும் கவிதை சிகிரிய கிறுக்கல் கவிதை எனப்படும்.

சிகிரியப் பூங்கா

- மகுல்உயன பூங்கா – மேற்கே காணப்படுகின்றது.
- பரணவிதான இதனை 'பிரமத' எனக் குறிப்பிடுகின்றார்
- சிகிரியாப் பூங்கா நீர்ப்பூங்காவுடன் கூடியதாக அமைந்துள்ளது.
- சிகிரியா நீர்மலர் மிகச் சிறந்த தொழில்நுட்பப் படைப்பாகும்.

சிகிரியா ஓவியம்.

- சிகிரியாவின் உட்குழிவான இடங்களில் காணப்படும் பெண்களின் உருவங்கள் புகழ்பெற்றவை.
- மேகங்களிலிருந்து எழும்பி உடலின் மேற்பாகம் தெரியும் படி இப்பெண்களின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன.
- 1500 ஆண்டுகள் பழமைவாய்ந்த இவை உலகின் உன்னத கலைப்படைப்புக்கள் எனப் பிரபல்யம் பெற்றுள்ளன.

**2. தம்புள்ள ரஜமகஹா விகாரை**

- சித்திரங்களுடனான பாரிய குகை விகாரை
- இயற்கையான கல்லனுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள பௌத்த விகாரை
- குளிர்ச்சியான ஆரோக்கியமான இடம்.
- 1991 இல் உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

**3. காலிக் கோட்டை**

- போர்த்துக்கேயரால் சிறியளவில் கட்டப்பட்டது.
- ஒல்லாந்தர் பாதுகாப்பு அரணாகப் பலமிக்கதாகக் கட்டினர்
- ஒல்லாந்தர் கட்டடக்கலை மரபைச் சேர்ந்த
  - கட்டடங்கள்

- தொல்பொருட்கள்
- நினைவுச் சின்னங்கள் இங்கு காணப்படுகின்றன.

▪ 1988 இல் உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

4. **தலதா மாளிகை உள்ளிட்ட கண்டி நகரம்**
    - கண்டி நகர வரலாறு
    - பழைய கட்டடங்கள்
    - நகரைச் சுற்றி நடைபெறும் சமய பண்பாட்டு நடவடிக்கைகள் என்பவற்றிற்காக 1988 இல் உலக மரபுரிமையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
        - தலதாமாளிகை
        - பழைய அரச மாளிகை
        - மகுல் மடுவ பழைய கட்டடங்களுக்குச் சான்று
        - கண்டி எசலப் பெரகர
        - பண்டைய பழக்க வழக்கங்கள், சமபிரதாயங்கள், பாரம்பரிய கலை அம்சங்களை எடுத்துக் காட்டுகின்றன.

**தொட்டுணர முடியாத மரபுரிமைகள்**

▪ பரம்பரை பரம்பரையாக மக்கள் குழுவால் முன்னெடுத்துச் செல்லப்படும் கலாசார மரபுரிமைகள் தொட்டுணர முடியாத மரபுரிமைகள் எனப்படும்.

**தொட்டுணர முடியாத மரபுரிமைகள் - யுனெஸ்கோ**

1. நாட்டார் மொழிவழக்கும் கருத்துவெளிப்பாடும்
2. அரங்கக் கலைகள், நாட்டார் பாடல்கள், நாட்டார் இசை
3. சமூகப் பழக்க வழக்கங்கள், வழிபாடுகள், நம்பிக்கைகள், விழாக்கள்
4. இயற்கையும் சுற்றாடலில் இருந்து பெறும் அறிவும் பழக்கமும்
5. மரபுரீதியான கலைநுட்பங்கள்

1. **நாட்டார் மொழிவழக்கும் கருத்துவெளிப்பாடும்**
    - சிங்கள மொழி – 2500 ஆண்டு வரலாறு
    - தமிழ்மொழி – நீண்ட வரலாறு
    - நீண்ட காலம் இம்மொழிகள் பயன்படுத்தப்பட்டு வந்தமையால் அவற்றிற்குரித்தான மொழி அமைப்புக்கள் உருவாகி உள்ளன.
    - உவமைகள், உருவகங்கள், பழமொழிகள் போன்றவற்றால் இம்மொழிகள் ஊட்டம் பெறுகின்றன.
    - சிங்களமொழி, தமிழ்மொழி என்பன ஏனைய மொழிகளாலும் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளது.
    - தமிழ்மொழி சமகால ஏனைய மொழிகளின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளது.
    - மொழி கையாள்வது – தொட்டுணரமுடியாத மரபுரிமையாகும்.

2. **அரங்கக் கலை**
    - ரூவன்வெலிசாய அடிக்கல் நாட்டும் வைபவம் - நடனம்
    - தற்காலம் சிறப்பு அதிதிகள் - நடனம்.
    - முதலாம் பராக்கிரமபாகு – ஆடல் பாடலுக்கு என கட்டடங்கள் அமைத்துள்ளான்.
    - முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் மனைவி ரூபாவதி ஆடல் பாடலில் சிறந்தவள் - மகாவம்சம்
    - இலங்கையின் ஆடல், பாடல் பற்றி
        - மகாவம்சம்
        - கவிசிலுமின
        - சந்தர்மலங்கார போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளது.

- 2 ஆம் பராக்கிரமபாகு மன்னன்
    - பல்வேறு ஆடல் பாடல்கள்

மதுர கீதங்களுடன் விழாக்கள் நடத்தியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது

- பழங்கால ஆடல், பாடல்களில்
    - பலவித மேளங்கள்
    - வீணை
    - குழல் போன்ற சங்கீத உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பண்டைய நடனம், சங்கீதக் கலைகளில் சிலசம்பிரதாயங்கள் இன்றைய

- சாந்தி கர்ம சடங்குகள்
- பூஜைகளிலும் காணப்படுகின்றன.
- கண்டி எலகலப் பெரஹர
    - நாட்டார் பாடல் கலாசார மரபுரிமைகளில் ஒன்றாகும்.
    - பிரதேசத்திற்குரிய நாட்டார் பாடல்கள் உண்டு.
    - எனவே இவை பரம்பரை, பரம்பரையாக எமக்குக் கிடைக்கப்பெற்ற தொட்டுணர முடியாத மரபுரிமைகளாகும்.
        - பண்டைய விவசாயப் பாடல்கள்
        - மாட்டு வண்டிப் பாடல்கள்
        - மீனவர் பாடல்கள்
        - சுரங்கப் பாடல்கள்
            - களைப்பைப் போக்குவதற்கும்
            - தனிமையைப் போக்குவதற்கும் பாடப்பட்டவையாகும்.
            - பண்டைய மக்களின் அனுபவங்கள் தொழில்கள் பற்றி அறிய உதவுகின்றது.

- பெற்றோர், பெரியோரின் குணநலன்களை எடுத்துரைத்தல்
- தலாட்டுதல்
- இளைய பரம்பரையை நல்வழியில் கொண்டுவருதல்
- பசியை வெளிப்படுத்தல்
- உறவினரிடையே தொடர்பை வெளிப்படுத்தல்
  என்பவற்றிற்காகவும் நாட்டார் பாடல்கள் பாடப்பட்டன.
- மனதில் எழும் எண்ணங்களை வெளிப்படுத்தி அவற்றைத் தாளத்துடன் பாடுதல் நாட்டார் பாடல்களில் காணப்பட்டது. இவை சமுகம் ஒன்றினதும், மக்கள் குழுவினதும் மரபுரிமையாகும்.

## சமூகப் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்.

| பரம்பரையாக வரும் தொட்டுணர முடியாத மரபுரிமை | பரம்பரையாக வரும் நற்பழக்கங்கள் |
|---|---|
| சமூகப் பழக்கவழக்கங்கள் | காலணிகள் |
| வழிபாடுகள் | தலைக்கவசம் கழற்றுதல் |
| நம்பிக்கைகள் | பெற்றோர் ஆசிரியர்களை வணங்குதல் |
| | மரியாதை செலுத்துதல் |
| | கைகழுவி உணவு உண்ணுதல் |
| | சீவராசிகளுக்குக் கருணை காட்டுதல் |
| | ஏழை எளியவருக்கு உதவுதல் |

இவற்றின் மூலம்

- கருணை
- அன்பு
- ஒழுக்கம்
- நேர்மை போன்ற உயர் பண்புகள் வளர்ச்சியடையும்.

**விழாக்கள் நடத்துதல்**

| பிறப்பில் செய்ய வேண்டிய கடமைகள் | மக்கள் ஒன்றுகூடிச் செய்ய வேண்டிய பொது வைபவங்கள் - இராஜரட்டைக் காலம் | பரம்பரையாகப் பின்பற்றப்பட்டுவரும் தொட்டுணர முடியாத மரபுரிமைகள் |
|---|---|---|
| பெயர் வைத்தல | வெசாக் விழா | வெசாக் |
| காதுகுத்துதல் | நீர்விளையாட்டு விழா | எசலப் பொரஹர |
| சோறு ஊட்டுதல் | ஏர்பூட்டு விழா | உபசம்பதா |
| ஏடு தொடக்குதல | | |
| விவாகம் செய்தல் | | |

| இலங்கை மக்கள் பின்பற்றும் மதம் | கொண்டாடும் விழாக்கள் |
|---|---|
| பௌத்தம் | சிங்கள புதுவருடம் - பௌத்த பழக்கவழக்கம் |
| இந்து மதம் | தைப்பொங்கல் |
| இஸ்லாம் | ரம்ழான் பெருநாள் |
| கிறிஸ்தவம் | பாலன் பிறப்பு |

**பாரம்பரிய கலைநுட்பங்கள்**

- சுவரோவியம்
- பாய்பின்னல்
- பித்தளைப் பாத்திரம் செய்தல்
- முகமூடி செய்தல்
- கலை
- பொம்மலாட்டம்
- மெழுகுக் கலை

- தொட்டுணரக்கூடிய
- தொட்டுணர முடியாத
- கலாசார மரபுரிமைகளைப்பரம்பரை கரம்பரையாகப் பாதுகாத்ததினால் அவை இன்றைய சமூகத்திற்கு உரிமையாகி உள்ளன.

**முகமூடிகள்**

- சாந்தி கர்ம சடங்குகள்
- கூத்துக்கள் - போன்றவற்றிற்காக முகமூடிகள் செய்யப்பட்டன.

  இதில்
  - பிசாசுகள்
  - தேவர்கள் உருவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
  - பயம், மகிமையைக் காட்டுவதற்கு முகமூடிகள் பயன்படுத்தப்பட்டன.

- இலங்கையின் தென்பகுதியில் முகமூடி செய்வதற்குப் பிரசித்தி பெற்ற இடங்கள்
    - அம்பலாங்கொடை
    - உடுவில

**அரக்கு சித்திரக்கலை**

- மத்திய மலைநாடு பிரசித்தி பெற்றது.
- கெப்பெட்டியா செடியில் வாழும் லாக்ஷா என்ற சிற்றுயிரினத்திலிருந்து பெறப்படும் பசை இத்தொழிலுக்கான மூலப்பொருள்.
    - ஊன்றுகோல்
    - கைத்தடி
    - மரத்தினாலான வெற்றிலைத் தட்டம்
    - மரத்திலான சாடிகள்
    - வீட்டுப் பாவனைப் பொருட்கள்
    - விசிறிக் கைபிடி
    - ஆலவட்டம்
    - ஏட்டுச் சுவடிகளின் அட்டை
    - அலங்காரம் போன்றவற்றிற்காக இக் கைத்தொழில் பயன்படுகின்றது.

**பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்**

- படைப்பாக்கம் தொடர்பான முன்னோர்களின் அறிவு
- நாடு, இனம், மதம் தொடர்பாக அவர்களின் மனப்பாங்குகள் அனுபவங்கள் இவற்றை நாம் பாதுகாக்க வேண்டும்.
- இலங்கைக்கே உரித்தான கலாசார மரபுரிமைகளைப் பாதுகாத்தல் அவசியம்
- கலாசார மரபுரிமைகள் சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சிக்கு உதவுகின்றது.

**எமது முன்னோர்கள் பாதுகாத்து எமக்கு அளித்த கலாசார, பண்பாட்டு மரபுரிமைகளைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பது எமது பொறுப்பும் கடமையுமாகும்.**



இலங்கையின் மாகாணங்கள்
வடமாகாணம்
வடமத்திய மாகாணம்
வடமேல்
மாகாணம்
கிழக்கு
மாகாணம்
மத்திய
மாகாணம்
மேல்
மாகாணம்
ஊவா மாகாணம்
சப்பிரகமுவ
மாகாணம்
தென்
மாகாணம்

# அலகு 7.2 எமது கீர்த்தி மிக்க அரசர்கள்



## அலகு 7.2. எமது கீர்த்தி மிக்க அரசர்கள்

## தென்னிந்திய இராச்சிய தலைநகரங்கள்



# இலங்கையின் பிரதான குளங்கள்



# அலகு 7.2

## எமது கீர்த்தி மிக்க அரசர்கள்



# அலகு 7.3 எமது கலாசார மரபுரிமைகள்



# அலகு 7.3 எமது கலாசார மரபுரிமைகள்



# அலகு 7. 2 எமது கீர்த்தி மிக்க மன்னர்கள்

